**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 149/2021 PW2**

19.11.2025 **வா.சா.2 அலமேலு சத்திய வாக்குமூலத்தின் பேரில் 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

என்னிடம் காட்டப்படும் எனது நிருபண வாக்குமூலத்தில் கண்டுள்ள விவரங்கள் அனைத்தும் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் தற்போது கள்ளப்புலியூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். சுமார் 20 வருடங்களுக்கு முன்பு எனக்கு திருமணம் ஆனது. சந்திராவுக்கு பிறகு தான் நான் திருமணம் செய்தேன். சந்திராவுக்கு திருமணம் ஆனது மற்றும் அவரது குடும்ப விவரம் எனக்கு தெரியும். அவரது வீட்டு சொத்து சம்மந்தமாக விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் என்ன சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது மாமனார் மாமியாருக்கு என் கணவர் ஒரே மகன். சந்திராவுக்கு எப்போது கல்யாணம் ஆனது என்று எனக்கு தெரியுமா என்றால் தேதி எனக்கு தெரியவில்லை. சந்திராவுக்கு பெண் குழந்தை பிறந்த தேதி எனக்கு தெரியவில்லை. சந்திராவுக்கு திருமணம் ஆகி 1 வருடம் கழித்து அவருக்கு குழந்தை பிறந்தது. சந்திரா எனக்கு அண்ணி உறவுமுறை. வாதி சந்திராவுக்கு அவரது அப்பா சொத்து கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் சொத்து கொடுக்கவேயில்லை. சந்திராவும் அவரது கணவரும் சேர்ந்து வாழவில்லை என்று சொன்னால் சரியல்ல. சந்திரா உடல் நலம் பாதிக்கப்பட்டு நீதிமன்றத்திற்கு வீல்சேரில் வந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். சந்திராவுக்கு தேவையான அனைத்து தேவைகளையும் 1ம் பிரதிவாதி தான் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. சந்திராவின் மகள் திருமணத்தை சங்கர் தான் முன்நின்று செய்து வைத்தார் என்றால் சரியல்ல. சந்திராவும், அவரது மகளும் தனித்து வாழ்கிறார்கள் என்றால் சரிதான். சந்திராவுக்கு எந்த வருமானமும் கிடையாது. தனது மகளுக்கு திருமணம் செய்து வைக்கும் அளவிற்கு எந்த வசதியும் கிடையாது என்றால் சரிதான். சந்திராவால் எந்த வேலைக்கும் செல்ல முடியாது என்றால் சரிதான். சந்திராவும், சங்கரும் ஒரே தாய்க்கு தான் பிறந்தார்களா என்றால் ஆம். சந்திராவும், சங்கரும் வெவ்வேறு தாய்க்கு பிறந்தவர்கள் என்றும், அந்த விவரம் கூட தெரியாமல் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. சந்திரா அவரது கணவரை விட்டு பிரிந்த பிறகு சந்திராவுக்கு அவரது தகப்பனார் சொத்து கொடுத்தார் என்றும், அந்த சொத்தை விற்று தான் சந்திரா சென்னையில் குடியேறினார் என்றால் சரியல்ல. சந்திரா சென்னையில் குடியேறிய விவரம் தெரியுமா என்றால் தெரியும் பின்னர் வந்து விட்டார். சந்திராவும் அவரது கணவராகிய எனது சகோதரரும் பிரிந்த பிறகு ஒருவருக்கொருவர் வக்கில் நோட்டீஸ் அனுப்பிக் கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த காலக்கட்டத்தில் சந்திராவுக்கு வாழ்க்கை பொருள் உதவிக்காக உதவும் பொருட்டு சொத்து எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. எனது சகோதரர் பச்சையப்பன்

எப்போது இறந்தார் என்றால் சுமார் 2 - 3 வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார். சந்திராவும் அவரது கணவராகிய எனது அண்ணன் பிரிந்த பிறகு சந்திரா என் குடும்பத்தின் எந்த ஒரு சுபநிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளவேயில்லை என்றும், நான் வழக்கிற்காக எனது நிருபண வாக்குமூலத்தில் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சந்திராவின் குழந்தை அவருக்கு பிறந்தது கிடையாது என்றும் அது அவரது வளர்ப்பு குழந்தை என்றால் சரியல்ல. இந்த வழக்குரையில் கண்டுள்ள சொத்து விவரங்கள் தவறாக உள்ளது என்றும், அது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் சில சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். வாதி சந்திராவின் சம்மதத்தின் பேரில் அவ்வாறு விற்பனை செய்யப்படுகிறது என்றால் சாயில்ல. ஒவ்வொரு முறையும் அவ்வாறு விற்பனை செய்யும் போது சந்திரா அவரது பாகத்தை வாங்கிக் கொண்டார் என்றும் தற்போது பொய்யாக பாக வழக்கு போட்டுள்ளார் என்றால் சரியல்ல. சந்திராவும், சங்கரும், ராஜேந்திரனும் ஒரு கொலை குற்ற வழக்கில் சிக்கிக் கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் இருந்து விடுதலை பெறும் பொருட்டு வழக்கு செலவிற்காக சங்கர் அவரது வழக்கறிஞருக்கு ஒரு சொத்தை எழுதிக் கொடுத்தார் என்றும், அந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு சொத்தை எழுதிக் கொடுக்கவில்லை. வழக்கறிஞருக்கு எழுதிக் கொடுத்த சொத்தை மீண்டும் திருப்புவதற்காக சென்னையில் சப் காண்டக்டராக தொழில் செய்து அதில் வந்த வருவாயை வைத்து சங்கர் சொத்தை வழக்கறிஞரிடம் இருந்து மீட்டினார் என்றால் சரியல்ல. மேற்படி குற்ற வழக்கிற்காக சந்திரா ஒரு காசு கூட செலவு செய்யவில்லை என்றும், சங்கர் தான் செலவு செய்தார் என்றால் சரியல்ல. சந்திரா அவரது கணவரை விட்டு பிரிந்து சென்னை சென்று திரும்பி வந்தததில் இருந்து சங்கரின் பராமரிப்பில் தான் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கை பற்றியோ, சந்திராவைப் பற்றியோ எதுவும் தெரியாது என்றும், சந்திரா அழைத்ததின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.